Original Suit No. 304 /2021 நாள்: 05.08.2026

வா.சா 2 மணிவண்ணன் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி லோகேஷ் எப்படி தெரியும் என்றால் அவர் எனது தூரத்து உறவினர் ஆகும். 1ம் பிரதிவாதி ராஜேந்திரன் என்பவரை எனக்கு 25 ஆண்டுகளாக தெரியும். எனக்கு லாரி டிரான்ஸ்போர்ட் தொழில் ஆகும். 16.06.2010ம் தேதி கிரைய உடன்படிக்கை வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஏற்படுத்திக்கொண்டதாக தெரிவித்துள்ளேன் அன்றைய தினம் வாதி எங்கிருந்தார் என்றால் கந்தசாமி என்கிற பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கு வாதி வந்திருந்தார். அங்கு வைத்து ஒப்பந்தம் இயற்றிகொண்டார்கள். என்னென்ன ஆவணங்கள் பார்க்கப்பட்டது என்றால் நகல் ஆவணங்களை காண்பித்தார் உயில் ஆவணத்தின் நகலை காண்பித்தார் அசல் பைனான்ஸில் இருப்பதாக தெரிவித்துவிட்டார். உயில் எந்த தேதியில் எழுதப்பட்டிருந்தது என்றால் 1990ம் வருடம் எழுதப்பட்டிருந்தது தேதி சரியாக ஞாபகம் இல்லை. எனது பிரமாண வாக்குமூலம் நான் சொல்லி தான் தயாரிக்கப்பட்டுள்ளது. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் மூல ஆவணங்களை பார்த்ததாக தெரிவித்துள்ளேன், என்ன ஆவணங்களை பார்த்தேன் என்றால் உயில் ஆவணத்தின் நகலை மட்டும் தான் பார்த்தேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் கிரைய உடன்படிக்கையை பத்திர எழுத்தர் கந்தசாமி என்பவர் எழுதினார் என தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

2) நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் கந்தசாமி எழுதியதை நானும், வாதியும், 1ம் பிரதிவாதியும் மற்றும் சாட்சி வெங்கடேசன் ஆகியோர் பார்த்தோம் என தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட தினத்தில் அரசு வழிகாட்டு மதிப்பின்படி தொகை நிர்ணயம் செய்யப்பட்டதா அல்லது சந்தை மதிப்பின்படி தொகை நிர்ணயம் செய்யப்பட்டதா என்றால் சந்தை மதிப்பின்படி தொகை நிர்ணயம் செய்யப்பட்டது. ஒரு சதுரடிக்கு ரூ.250- என விலை நிர்ணயம் செய்யப்பட்டதாக நினைக்கின்றேன். நான் மனை பிரிவுகளை சென்று பார்த்துள்ளேன். கிரைய உடன்படிக்கை ஏற்படுவதற்கு முன் மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்பாக தாவா சொத்தை பார்த்துள்ளேன்.

3) கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திய தினத்தில் வாதி கிரைய தொகை முழுவதையும் 1ம் பிரதிவாதி வசம் செலுத்திவிட்டார் என்றால் சரிதான். கிரைய உடன்படிக்கையானது கடந்த 16.06.2010ம் தேதி ஏற்பட்டுள்ளது வழக்கானது 2021ம் ஆண்டில் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது இந்த இடைப்பட்ட 11 ஆண்டில் நான் வாதி லோகேஷிடம் கிரைய ஆவணம் இயற்றிகொள்வதற்கு தெரிவித்தேனா என்றால் பலமுறை தெரிவித்தேன், லோகேஷ் என்னிடம் கிரைய ஆவணம் இயற்றிகொள்வதற்கு தெரிவித்தார், நான் ராஜேந்திரனிடம் கிரைய ஆவணத்தை இயற்றிகொடுக்குமாறு பலமுறை கேட்டேன் ஆனால் ராஜேந்திரன் காலம் தாழ்த்திவிட்டார், வாதியிடம் நான் உடனடியாக வழக்கு தாக்கல் செய்ய கூறவில்லையா என்றால் ராஜேந்திரன் எனது நண்பர் என்பதால் பலமுறை ராஜேந்திரனிடம் கேட்டபோது கிரைய ஆவணம் இயற்றிதருவதாக தெரிவித்ததால் உடனடியாக வழக்கு தாக்கல் செய்ய நான் சொல்லவில்லை. இந்த விவரங்கள் எனது பிரமாண வாக்குமூலத்தில் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் வாதியின் உறவினர் என்பதாலும், 1ம் பிரதிவாதியின் நண்பர் என்பதாலும் நாங்கள் மூவரும் சேர்ந்து போலியான கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தி வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல.

4) தற்போது 2ம் பிரதிவாதி ஏழுமலை தான் சொத்தை உரிய விலை கொடுத்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னர் தற்போது வரை சொத்துக்குரிய வில்லங்கத்தை போட்டு பார்த்தேனா என்றால் நான் போட்டு பார்க்கவில்லை. வாதி ரூபாய் மூன்று லட்சம் செலுத்தி 1ம் பிரதிவாதியிடம் தாவா சொத்தைப் பொறுத்து கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டார் என தெரிவிப்பது பொய் என்று சொன்னால் சரியல்ல. வாதி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி
என்று ஒப்புக் கொண்டு என்
முன் கையெழுத்து செய்தார்.
ஒம்/V.S.பாலமுருகன்,
கூடுதல் சார்பு நீதிபதி,
கரூர்.